ஆன்மீகப் பன்னூலாசிரியர்

ஹகீகத்துல் அஸ்ரார் அஷ்ஷெய்க்

# ஹைதர் அலீ யகீனுல்லாஷா (ரலி)

# அல்ஆரிஃபுபில்லா

# கலீஃபத்துல் காதிரி ஷத்தாரி சிஸ்தி

# சர்கலிஃபா ரிஃபாயி



அவர்களின்

## நினைவு மலர்

ஆக்கம்

முரீதீன்கள்

கான்காயே ஹைதரிய்யா

நெல்லிக்குப்பம் - கடலூர் மாவட்டம்

www.netsufi.com   Ph: +91 9894746014

பிஸ்மில்லாஹி அலா நிய்யத்தி

இறைவனைத் தேடுபவன் ஒரு காமிலான ஷெய்கு(சற்குருவின்)மூலமாக இறைவனிடம் அறிமுகப்படுத்தப்படுவான் என்பதே தரீக்கா எனும் ஞானப்பாதையின் நியதியாக உள்ளது.

ஒரு அடியான் இறைவனை அறிந்துணர உண்மையாக விழையும் பொழுது அவனுடைய குரு இறைவனால் அவனுக்கு அறிமுகப்படுத்தப்படுகிறார். அவனுடைய வாழ்க்கையில் பல்வேறு திருப்பங்களை குருவின் மூலமாக அந்த அடியான் அடைந்துகொள்கிறான்.

‘உலகில் தோன்றியுள்ள எந்த ஒரு கூட்டத்தினருக்கும் நம்முடைய தூதர்கள் அனுப்பப்படாமலில்லை’ (அல் குர்ஆன்-10:47)என்ற இறைவாக்கியத்தின் மறைபொருளும், ‘ ஞானாசிரியரை தேடுவது மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொரு ஜீவனுக்கும் கடமையாயுள்ளது, அப்படிப்பட்டவர் சீனாவிலிருந்தாலும் சரிரியாவிலிருந்தாலும் சரியே!’ என்ற நபிவாக்கியமும் இறையருள் நிறைந்த ஞானிகளாய் இப்புவி மீது தீன் பணி செய்து வாழும் ஷெய்குமார்களின் சிறப்பினை உணர்த்துகிறது.

இறைஞானத்தின் முதற்படியான சற்குருநாதரை தேடி அடைந்து அவர்மீது விசுவாசம் கொண்டுவிட்ட அடியானிடம், ‘ என் கரத்தைப் பற்றிக்கொள், நிச்சயமாக நான் உன்னை இறைநேசத்தின் பாதையில் அழைத்துச்செல்வேன்’, என்று குருவானவர் வாக்குறுதியளிக்கிறார்.

பின் அந்த முரீதின்(சீடனின்) சிதறிய கவனம், அன்பு, முயற்சி ஆகியவற்றை ஒன்று சேர்த்து, எங்கும் நிறைந்த இறைவனின் மீது அவற்றை ஒன்றுபட்ட மனத்துடன் ஒருமுனைப் படுத்தும் ஞான வழிகளை அவனுக்கு கற்றுக்கொடுக்கிறார்.

‘நம்பிக்கை கொண்டவர்களே! இறைவனுக்குக் கீழ்படியுங்கள் இன்னும் (இறைவனின்) துாதருக்கும், உங்களில் அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்’ , என்ற திருக்குர்ஆனின் (4: 59) வாக்கியங்கள் படி தன் ஆன்மாவின் மீது அதிகாரம் செலுத்தும் தன்னுடைய ஷெய்கிடத்தில் உண்மையாகவும், இதயப்பூர்வமாகவும் கீழ்படிந்து நடக்கும் அடியான் தன்னுடைய தான் என்னும் அகங்காரத்தை உடைத்து, பணிவை அடைகிறான்.

எந்த ஒரு அடியானின் மனமானது பணிவை அடைகிறதோ, அது அமைதியும் ஆனந்தமும் நிறைந்த இறை உணர்வை தனக்குள் உணரும் வல்லமையைப் பெற்றுவிடுகிறது. அப்போது தான் என்னும் அகங்காரத் தன்மையை இழந்து ‘தான் யார்’ என்ற கேள்விக்கான விடையைத் தேடுகிறது.

‘தன்னை அறிந்தவன் தன் நாயனை அறிந்தான்’ என்ற நபிவாக்கியத்தின் யதார்த்தத்தையும் அது புரிந்து கொள்கிறது.

**முரீது–ஞானதீட்சை:**

‘இறைவனின் பாதையில் முன்னேற முற்படும்போது ஷரீஅத் எனும் சட்டங்களுக்கு உனக்கு புதுப்புது அர்த்தங்கள் உணர்த்தப்படும்’ என்ற கௌதுகள் நாயகம் முஹ்யித்தீன் ஆண்டகையின் வாக்கிற்கொப்ப இஸ்லாமிய ஷரீஅத்தின் முதற்படியான கலிமா திருவாக்கியமே, தரீக்கத்தின் உச்ச நிலையாக உள்ளது என்பதை குருவின் மூலமாகவே அடியான் அறிந்து கொள்கிறான்.

நீ இறைவனை அறிய விரும்பினால், அவனிடத்தில் செல்வதற்கு வேண்டிய சக்தி உனக்கு வேண்டுமானால், நீ பார்க்க முடியாத, இக்கணம் நீ தொட முடியாத, புலன் உணர்வினால் அறியமுடியாத அந்த இறைவனிடத்தில் விசுவாசத்தை வளர்க்க வேண்டும். நீ அந்த காணமுடியாத இறைவனிடத்தில் நம்பிக்கை வைத்துத்தான் ஆக வேண்டும். ஏனெனில் உன்னுடைய வரம்பிற்குட்பட்ட மனிதப் புலன்களுக்கு இப்பொழுது மெய்யாகத்தோன்றும் அனைத்திற்கும் பின்னால் இருக்கும் ஒரே உள்ளமை அவன்(இறைவன்)தான் –என்று குருவானவர் தன் சீடனிடத்திலே இறை விசுவாச ஜோதியான கலிமாவை ஏற்றிவைப்பார்.

இதையே தரீக்கத் என்னும் ஞான மார்க்கத்தில் ‘முரீது’ அல்லது ஞான தீட்சை வழங்குதல் என்று கூறுவர். ஒரு காமிலான ஷெய்கிடத்தில் ஞானதீட்சை பெற்றுவிட்ட சீடனானவன் தன் குருவிடத்தில் நேரடியாக இணைகிறான். அவனுக்கும் குருவுக்கும் உள்ள அந்த உறவானது அருள்நிறைந்த புனித உறவாக, உலக உறவுகளுக்கெல்லாம் மேலான ஒரு பந்தமாக, அவனது வாழ்வின் ஒரு அங்கமாக இருக்கும் பட்சத்தில், அந்த குரு–சிஷ்ய உறவின் ஆன்மீக சக்தியானது முரீதுடைய ஆன்ம தாகத்திற்கேற்ப அவனுடைய வாழ்க்கையில் செயல்படத் தொடங்குகிறது.

எங்களுடைய ஞான குருநாதரான ஹகீகத்துல் அஸ்ரார் அல் முஃபஸ்ஸிருல் குர்ஆன் அஷ்ஷெய்க் ஹைதர்அலீ யகீனுல்லாஷா அல் ஆரிஃபுபில்லா அவர்கள் முரீதுகளான சீடர்களைப் பற்றி கூறும்போது,

‘சீடனானவன் தன்னுடைய நஃப்ஸின் (மனதின்)குண இயல்பை

பிரதிபலிக்கும் கண்ணாடியாக தன் குருவைக் காண்கிறான். அவன் குருவிடத்திலே பக்தியும் நம்பிக்கையும் கொண்டு கீழ்படிந்து சரணாகதியென நிற்கும்போது, குரு சீடனுக்கு கண்ணாடியாகி இறைவனை நெருங்கும் பாதையில் சீடனுக்குத் தடையாய் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி, அதனை களையும் வழிமுறைகளைக் கற்றுக்கொடுக்கிறார். இப்படிப்பட்ட குருவானவர் ஒருவனுக்கு கிடைத்துவிட்டால் அவனே இவ்வுலகில் பெரும் பாக்கியசாளியாவான்.'

என் ஷெய்குடைய வார்த்தைகளை வைத்துப் பார்ப்பின் நான் மிகப்பெரும் பாக்கியசாளியாவேன்.ஆம், நானே மிகப்பெரும் பாக்கியசாளியாவேன்.

**எம் கண்குளிர்ந்த குருநாதர்:**

என்னுடைய ஷெய்கானவர் உடல், உள்ளம் மற்றும் ஆன்ம ஏழ்மையில் உள்ளவர்களிடத்தில் உதவி செய்வதை ஆனந்தமான கடமையாகக் கருதினார். திக்கற்றோருக்கும், பசித்திருப்போருக்கும், அறியாமையில் ஆழ்ந்திருந்தோருக்கும் அவர் உதவி செய்யத் தவறியதேயில்லை. இன்னும் ஏன் தன்னை எதிரியாக பாவிப்பவனிடத்தில் உணர்வற்றிருக்கும் இறைவனை அவர் நேசிக்கத் தெரிந்திருந்தார். நான் இதுவரை பார்த்த மனிதர்கள் அனைவரிலும் என் குருவே மிகச்சிறந்த கொடையாளி. அவர் மகான், அறிஞர், செயல்வீரர் ஆகிய மூன்றின் ஓர் அறிய கலப்பு.

உன்னதம் நிறைந்த என் குருநாதருக்கு இவ்வுலகில் ஒவ்வாத ஒரே விஷயம் 'புகழ்' . ஆம், அவர் கூறுவார், 'மனிதர்களிடமிருந்து இறைவன் புகழைத்தவிர வேறெதனையும் எதிர்ப்பார்ப்பதில்லை. திருக்குர்ஆனின் ஆரம்ப பனுவலின் முதல் வரியிலே 'அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்-புகழனைத்தும் ஏக நாயனுக்கே உரித்தாகுக' என்று இறைவன் கூறுவதை கவனியுங்கள். இறைவனுக்கே உரித்தான புகழில் மனிதன் குறுக்கிடுவது தவறு' என்று கூறி சொன்ன சொற்படி வாழ்ந்தும் காட்டினார்.

ஏறக்குறைய இருபது நூல்களை(3 ஆங்கில நூல்கள் உட்பட)அவர் எழுதியிருந்தாலும் பல நூற்றுக்கணக்கான சீடர்களைப் பெற்று மகா குருவாக விளங்கினாலும், நபி ஈஸாஅலைஹிஸலாம்(இயேசு கிறிஸ்து) மற்றும் நபி மூஸா அலைஹிஸலாம் (மோஸஸ்)ஆகியோரின் நேரடி தரிசனைப் பெற்றிருந்தாலும், ஈருலக இரட்சகர் இறைவனின் முத்திரைத் தூதராம் முகம்மது நபிகள் நாதரை(ஸல்) பலமுறை கனவில் கண்டிருந்தாலும், நபிபெருமானாரின் துணைவியர் அனைவரது நல்லாசியை கனவில் அடைந்திருந்தாலும்,

ஆதம் (அலை)முதல் நபிபெருமானார் (ஸல்)அவர்கள் வரை உள்ள

குறிப்பிடத்தக்க பதினோறு நபிமார்களின் திருக்கரங்களை தன் சிரசில் ஏற்றிருந்த போதிலும், இன்னும் அஞ்ஞான வேரறுத்திட்ட மெய்ஞ்ஞானிகளான இறைநேச செல்வர்களின் அன்பையும் அருளையும் பரிபூரணமாக பெற்றிருந்த போதிலும் 'தான்' எனும் தன்னுணர்வு மேலெழ அவர் தன்னை உலக மாந்தர்களின் முன் நிறுத்தியதே இல்லை.

இப்படிப்பட்ட குறையில்லா நிறையருள் நிரம்பப்பெற்ற, நலம் தரும் நாயனின் நல்லடியார்களின் நல்லடியாராய் வாழ்ந்து சிறந்த என் சங்கைக்குரிய குருநாதரின் ஜீவித சுருக்கத்தினை நல்லோர்களான உங்கள்முன் வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**ஷெய்குனாவின் பிறப்பு:**

பசுமை கொஞ்சும் தஞ்சை மாவட்டத்தில் காவேரியின் கிளை நதியான ஓடம்போக்கியின் படுகையில் அமைந்த ஒரு குக்கிராமமான கூத்தூர் கிராமத்தில் ஹிஜ்ரி 1361 ஷவ்வால் பிறை-8 (கி.பி.1942ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19ம்நாள்) அமீர் அலீ -ஃபாத்திமா பீவி தம்பதியினருக்கு ஷெய்குனா ஹைதர்அலீ யகீனுல்லாஷா நாயகம் அவர்கள் மகனாகப் பிறந்தார்கள்.

**ஷெய்குனாவின் முன்னோர்கள்:**

இறைநேசர்களான நல்லடியார்களின் வழிவழியடிமை என்ற உரிமையை கூத்தூர் கிராமத்தில் தன்னகத்தே நிலை நிறுத்திக் கொண்ட அளப்பரிய அருட்புகழ் பெற்ற குடும்பம் நம் ஷெய்குனா அவர்களின் குடும்பம்.

*தொண்டு செய்ய நின்ற துறவியர்களே அருளைக்*
*கண்டுகொள்ள கண்டாயென் கண்ணே ரகுமானே*

என்பதை அறிந்திருந்த ஷெய்குனாவின் மூதாதையர்கள் தங்கள் சொத்தில் ஒரு பகுதியை நல்லடியார்களின் ஃபாத்திஹாக்களுக்காகவும், ஜமா ஃபக்கீர்களின் விருந்தோம்பலுக்காகவும், ஏழை எளியோரின் பசி தீர்க்கவும் ஒதுக்கி வைத்திருந்ததுடன் தங்கள் சந்ததியினரையும் அவ்வாறே செய்துவரவும் பணித்தார்கள்.

தனவான்களாகவும்,கணவான்களாகவும் இருந்த ஷெய்குனாவின் முன்னோர்கள் தலைசிறந்த ஞானவான்களாகவும் திகழ்ந்து தங்களை நாடி வருவோர்க்கு நாடிய பொருட்செல்வத்தையும், அருட்செல்வத்தையும் வாரி வழங்கும் கொடை வள்ளல்களாகவும் இருந்தனர் என்பதை மேன்மை பொருந்திய அவர்களின் வாழ்க்கையை விவரிக்கும் சரித்திர நூல்களிலும் இன்னும் ஞான நூல்களில் ஷெய்குனாவின் முன்னோர்களைப் பற்றி ஆங்காங்கே குறிப்பிடப்படும் சிறு குறிப்புகளின் வாயிலாகவும் நாம்

அறிகிறோம்.

கீர்த்திமிகு குலக்கொடியில் புதுமலரென பூத்து நின்ற நம் ஷெய்குனாவின் இதயத்தில் இறைவனுக்கான தேட்டத்தையும் அந்த ஏக பராபரன் மீது நாட்டத்தையும் அடிநாட்களில் இருந்து துளிர்விடச் செய்தவர்கள் ஷெய்குனாவின் இருபெரும் பாட்டன்மார்கள் ஆவர்.

அவர்களில் ஷெய்கு நாயகத்தின் தந்தை வழி பாட்டனார் புனிதம் நிறைந்த பரம்பரைத்தொடரில் தந்தை வழியில் செய்யதினா அபூபக்கர் சித்தீக்(ரலி) அவர்களையும், தாய் வழியில் சையிதினா ஹுஸைன்(ரலி) அவர்களையும் மூதாதையர்களாக கொண்ட அமைதி மேவும் கூத்தூரின் ஆன்மீக ஜோதியாய் திகழ்ந்த இறைநேசச் செல்வர் முகம்மத் அலீ சாஹிபு மாலுமியார் அப்பா அவர்களும்,

தந்தை வழியில் மைசூர் மாமன்னர் ஹைதர்அலீயின் குலவழிப்பேரரும், தாய் வழியில் நாகூர் காதிர்ஒலி நாயகத்தின் 404 ஃபக்கீர்களில் ஒருவரான முகம்மத் அலீ முஃஜாவிர் (ரலி)அவர்களின் திருப்பேரருமான ஷெய்குனாவின் தாய் வழிப்பாட்டனார் கூத்தூர் ப.உ. அலாவுதீன் சாஹிபு அவர்களுமே ஆவர்.

**பாலஞானிக்கு பரமோபதேசம்:**

ஷெய்குனா அவர்களின் மழலைப் பருவம் பந்தமும் பாசமும் மிகுந்த உறவுகளால் நிறைந்திருந்தது. தங்களின் மூதாதையர்கள், பாட்டனார்கள், பாட்டியார்கள், தாய்,தந்தை,மாமன்கள்,மாமிகள்,சகோதர சகோதரிகள் இன்னும் சிறு பிராயத்தில் அவர்கள் வசித்த இல்லத்தில் அவர்களோடிருந்த அநேக உறவுகளைப் பற்றி பேசும்போது ஷெய்குனா அவர்களின் முகமானது தாமரை மலர்போல் விரிந்து அதரங்கள் குறுநகை சிந்தும்.

இறைநேச விசுவாசியாய் வாழ்ந்து மெய்ஞ்ஞான நாதாக்களின் வாழ்வை நூல்களாக வடிப்பதற்கு ஆதாரமாய் அமைந்தது ஷெய்குனா அவர்களின் அடிநாட்களில் அவர்களோடிருந்த உறவுகளும் அந்த உறவுகளின் மூலமாக அவர்கள் பெற்ற அனுபவங்களுமே ஆகும்.

‘நீ எங்கு சென்றாலும், எங்கு இருந்தாலும் அச்சம் உன்னை அணுகுமானால் *பிஸ்மில்லா முஹ்யித்தீன் அல்லா முஹ்யித்தீன்* என்று அழைப்பு விடு நிச்சயமாக முஹ்யித்தீன் ஆண்டவர் அவர்கள் உன் துணைக்கு வருவார்கள்’ என்ற பாட்டியாரின் உபதேசமும்,

இறைநேச செல்வர்களின் பெயரை உச்சரிப்பதால் கிடைக்கும் நற்பேருகளை தம் வாழ்வில் நேரடியாக காணச்செய்த ஷெய்குனாவின் சிறிய தாயார் ஜெய்துன் பீவி அம்மா அவர்களும், ஷெய்குனாவின் அன்புக்கினிய சகோதரி மலிக்குன்னிஸா ஆகியோரின் அருளாசியும்,

இரவுதோறும் ஷெய்குனாவின் செவிகளில் நூற்றுக்கணக்கில் கௌதுகள் நாயகம் முஹ்யித்தீன் ஆண்டகையின் ‘திப்பில் குலூபி’ ஸலவாத்தை தாலாட்டு மழையெனப் பொழிந்து, ஷெய்குனாவின் இதயத்தில் கௌதுகள் நாயகத்தின் திருநாமத்தை நிறைத்த பாட்டனார் ப.உ.அலாவுதீன் சாஹிபு அவர்களின் அருட்கீத திக்ரும்,

*நம்மை நாம் கண்டறிய நாடினாம் வந்தோமல்லால்*
*பொம்மைக் கூத்தாட அல்லபோம்,*
*ஹூஹூகா ஜோலிகா பங்கா லகாவ் –*
*உன் மூச்சு இறைவனின் பெயரை உச்சரித்துக் கொண்டு*
*ஓடிக்கொண்டிருக்கிறது.*
*நீ அதன் இரகசியத்தை அறியவேண்டாமா?*

என்று ஷெய்குனாவின் உணர்வுகளை தட்டி எழுப்பிய பாட்டனார் முகம்மத் அலீ சாஹிபு அவர்களின் ஞான போதனைகளும், ஷெய்கு நாயகத்தின் பாலமனத்தில் பசுமரத்தாணி போல் பதிந்தது. ஓர் உன்னத நோக்கத்திற்காக தன்னை இறைவன் படைத்திருப்பது மெல்ல மெல்ல அவர்களுக்குப் புரிந்தது.

**கஸஸுல் அன்பியா:**

ஷெய்குனா அவர்களின் தாயாரான அன்னை ஃபாத்திமா பீவி அவர்கள் மாலை வேளைகளில் தன் தோழிகளோடு அமர்ந்து நபிமார்களின் வரலாறான ‘கஸஸுல் அன்பியா’ வை படிக்கும் வழக்கத்தை கொண்டிருந்தார்கள். ஆறு வயதே நிறைந்த நம் ஷெய்குனா அவர்கள் அந்த சிந்தைக்கினிய சீமான்களின் சீர்மிகு வரலாற்றினை செவியுறுவதில் அதீத ஆர்வம் கொண்டிருந்தார்கள்.

அதிசயங்களும், அற்புதங்களும் நிறைந்த நபிமார்களின் வரலாறு நம் ஷெய்குனாவின் இதயத்தை ஈர்த்து, அவர்களை ஆழ்ந்த சிந்தனைகளுக்கு ஆளாக்கியது.

குறிப்பாக நபி மூஸா(அலை)அவர்களுடன் ஆண்டவன் பேசியதையும் அவர்களுக்கு கட்டளைகள் பிறப்பித்த சம்பவங்களையும் செவியுற்ற நம் ஷெய்குனா அவர்கள் சிந்தனை மேலெழுந்தவராய் தம் பாட்டனரிடம் ‘அப்பா! என்னாலும் இறைவனை காண முடியுமா? அவனுடன் பேச முடியுமா?’ என்று வினவினார்கள்.

ஈராக்கின் இஸ்லாமிய கலாச்சார தலைநகரங்களாய் விளங்கிய புகாரா சமர்கந்த் பிரதேசங்களை வந்தேரிப் படைகள் கைப்பற்றியதை கேள்வியுற்று தன் இல்லத்தின் வாயிலில் இருகரம் ஏந்தி இறைவனிடம் கண்ணீர் சிந்தி துஆ செய்து

அவ்விறு நகரங்களிளை தம்முடைய துஆ என்னும் மன்றாட்டத்தினால் சுதந்திர பூமியாக்கி விடுதலை பெறச்செய்த கூத்தூரின் ஞானவள்ளலாம் நம் ஷெய்குனாவின் பாட்டனார் முகம்மது அலீ சாஹிபு அவர்கள் தன் அருமைப் பேரரின் முதிர்ச்சியாக கேள்விக்கு 'ஹைதரே ! நிச்சயமாக நீ முயன்றால் இறைவனுடன் பேசலாம் அவனை தரிசிக்கலாம்' என்றார்கள்.

'அப்படியானால் அப்பா, நான் அல்லாவை இப்போதே சந்திக்க விரும்புகிறேன்' என்று பாலரான ஷெய்குனா அவர்கள் கூற, பாட்டனார் 'உலகம் அழிந்துவிடும்! இறைவன் நிறைந்தரமானவன்! நீ அவனை புரிந்துகொள்ள வேண்டுமானால் முதலில் நீ உன்னை ஆராய வேண்டும். உனக்குள் இருக்கும் இறைவனை நீ உணர வேண்டும்' என்று போதித்தார்கள்.

**தொட்டில் பழக்கம்:**

ஷெய்குனா அவர்கள் நபி மூஸா (அலை) அவர்களின் வரலாற்றினை கேட்கையில், 'ஃபிர்அவ்ன் என்னும் கொடிய மன்னனை இறைவன் வெகுகாலம் தண்டிக்காமல் விட்டதற்கு காரணம் அவன் அதிகாலை விழித்தெழும் பழக்கமுடையவன் என்பதால்தான்' என்ற செய்தியை செவியுற்ற நம் ஷெய்குனா அன்றிலிருந்து 'பிரம்ம முகூர்த்தம்' என்று சொல்லக்கூடிய தஹஜ்ஜத்துடைய நேரத்தில் துயில்களையும் வழக்கம் கொண்டார்கள். தம் வாழ்நாளின் விளிம்பு வரை அவர்கள் இவ்வழக்கத்திலிருந்து வழுவவேயில்லை.

'ஜாதிமத பேதம் பாராமல் அனைவரிடத்திலும் அன்பாக பழகுவது, தங்கள் வீட்டில் வேலைசெய்யும் பணியாட்களுக்கு உடற்பிணி ஏற்பட்டால், அவர்களின் குடிசைக்கே நேரடியாகச் சென்று நலம் விசாரிப்பது போன்ற பழக்கங்களை நபி ஈஸா (அலை) அவர்களின் வரலாற்றிலிருந்து நான் கற்றுக்கொண்டவை' என்று ஷெய்குனா கூறுவார்கள்.

'நான் எப்போது கடைக்குச் சென்றாலும், அக்கம்பக்கம் உள்ள தாய்மார்களிடம், உங்களுக்கு கடைக்கு ஏதாவது தேவையிருக்கிறதா? என்று தவறாமல் கேட்பேன், ஏனென்றால் நபிகள் நாயகம் (ஸல்) சிறுபிராயத்தில் இந்த பழக்கத்தைக் கொண்டிருந்தவர்களாக இருந்தார்கள் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

மேலும், நாயகம்(ஸல்) மழையைக் கண்டுவிட்டால் தம்முடைய மேலாடையைக் கழற்றிக் கொண்டு மழையில் நனைவார்கள் என்று கேள்வியுற்றபின் நானும் எங்கள் கிராமத்தில் எப்போது மழைவந்தாலும் சட்டையைக் கழற்றிக்கொண்டு வீதிகளில் ஓடுவேன்', என்று தன் அடிநாளின் நினைவிகளை என்னோடு பலமுறை பகிர்ந்திருக்கிறார்கள்.

**கல்விக்கரையிலே:**

ஞானாந்திகளான தம் பாட்டன்மார்களின் அருட்போதனையிலும், பாசமிகுந்த பந்தங்களின் அரவணைப்பிலும் கூத்தூர் கிராமத்தில் லௌகீக – ஆன்மீக ஆரம்பக்கல்வி பயின்ற நம் ஷெய்குனா அவர்கள், நாகையில் தங்கி நடுநிலைக்கல்வி பெற்றார்கள். பின் உயர்நிலைக் கல்விக்காக சென்னைக்கு சென்றார்கள்.

அங்கே தம் தந்தையின் ஏற்றுமதி இறக்குமதி பண்டகசாலை அலுவலகத்தில் தங்கி உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வியில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்கள்.

பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் டாக்டர் ராமதாஸும் ஷெய்குனாவும் சென்னை தம்புச்செட்டித்தெரு முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் 10,11 ம் வகுப்புகளில் ஒன்றாகப் படித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**கல்லூரிக் காலம்:**

கலைகளில் ஆர்வம் மிகுந்த நம் ஷெய்குனா அவர்கள், சென்னை மாநிலக் கல்லூரியில் இளங்கலை ஆங்கிலம் (B.A. English Literature) பாடப்பிரிவில் சேர்ந்தார்கள். பிறவிக் கவிஞரான நம் ஷெய்குனா அவர்கள் சிறுவயதிலிருந்தே கவிதைகள் எழுதும் ஆற்றலுடையவராய் திகழ்ந்தார்கள்.

மேலும் பள்ளிப் பருவத்தில் அவர்கள் எழுதிய ஒரு கட்டுரையில் ‘மனிதன் நிலவில் கால் பதிப்பான்’ என்ற தீர்க்க தரிசன சிந்தனையை கண்டு வியந்த ஷெய்குனாவின் பள்ளி ஆசிரியர் The Time Machine எழுதிய உலகப் புகழ் பெற்ற நாவலாசிரியர் எச்.ஜி.வெல்ஸ் போல வருவாய்! என்று ஆரூடம் கூறினார்.

அந்த ஆரூடம் அப்படியே பலிப்பதற்கு கலமமைத்துக் கொடுத்த இடம், சென்னை மாநிலக் கல்லூரி என்று சொன்னால் அது மிகையாகாது.

தமிழுலும், ஆங்கிலத்திலும் ஷெய்குனா எழுதும் கவிதைகளுக்கென்று அக்கல்லூரியில் தனி ரசிகர் கூட்டம் உருவெடுத்தது.

மதுரை நகர் கண்ட வழக்குறைஞர், ஷெய்குனாவின் உடன்பிறவா சகோதரர் இலக்குமண மூர்த்தி அவர்களும், முன்னாள் அமைச்சர் கா.இராசா முகம்மது அவர்களும், மறுமலர்ச்சி தி.மு.க வின் தலைவர் தமிழினக் காவலன் புரட்சி புயல் வைகோ அவர்களும் ஷெய்குனாவின் ரசிகர்களுள் முக்கியமானவர்கள்.

பிறவிக் கவிஞுரான ஷெய்கு நாயகம் மாநிலக் கல்லூரியின் தலைமைக் கவிஞரென அறியப்பட்டார்கள். பெருமை மிகுந்த பிக் இங்லிஷ் லெக்சர் ஹாலில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் முன்னிலையில், ஷெய்கு நாயகம் பாடிய கவிதையை மனதார பாராட்டிய கவியரசர் கண்ணதாசன் அவர்களையே ஷெய்குனா அவர்கள் தங்களின் இலக்கிய குருவாக கருதினார்கள்.

**இளைஞரின் ஞான வேள்வி:**

*நேராய் வழிகாட்டி நிச்சயத்தை சொல்லவெனக்*
*காருன்னை யன்றி யரசே நிராமயமே*

என்ற மஸ்தான் சாஹிபு அப்பா அவர்களின் மன்றாட்டத்தை நெஞ்சில் சுமந்தவர்களாய், 'யா காரத்தல்லாஹி' –இறைவனின் உதவியே வா, என்று இறைவனை அறியும் பாதையில், படைத்த நாயனின் உதவியை எதிர்பார்த்தவர்களாக, கவலை மிகுந்தவர்களாக தொழுதழுது நிற்கும் வேலையிலே,

ஷெய்குனாவின் தந்தைவழி உறவினரான பெரியார் நெ.கு.அப்துர் ரஹீம் அவர்கள் எஜமான் காதிர் ஒலி நாயகத்தின் அஸ்மாவுல் இலாமை ஷெய்குனாவிடம் கொடுத்து 'இதை அனுதினமும் ஓதி வா'என்று பணித்தார்கள். நாகூர் காதிர் ஒலி நாயகத்தின் திருநாமங்களை உச்சரிப்பதால் வரும் பலனை ஷெய்குனா அவர்கள், தங்கள் வாழ்க்கையில் கண்கூடாகக் கண்டார்கள்,

சிங்கையில் சமாதி கொண்டிலங்கும் க்ஷிஸ்தியா தரீக்கின் சற்குருவான ஷெய்குல் மஷாயிக் ஹபீபுல்லாஷா சிஸ்தி(ரலி)அவர்களிடம் ஷெய்கு நாயகமவர்கள் முரீது என்னும் ஞானதீட்சை பெற்றார்கள்.

கூத்தூரில் வாழ்ந்து மறைந்த மரியாதைக்குரிய மெய்தீன் என்கின்ற முகம்மது முஹையிதீன் கலீஃபத்துல் காதிரி அவர்களின் வாயிலாக மெய்ஞ்ஞான விளக்கங்களையும் ஆன்மீக அப்பியாசங்களையும் கற்றார்கள். பின்னர் எஜமான் காதிர் ஒலி நாயகத்தின் தர்பாரிலேயே ஓராண்டு காலம் தங்கிவிட்டார்கள்.

**இறைநெருக்கம் வேண்டுமா?**

'உனக்கு 'குர்பே இலாஹி' என்னும் இறை நெருக்கம் வேண்டுமானால் சூஃபித்துவ பாதையில் உனக்கு முன் இருக்கும் ஞானவான்களுக்கு தொண்டுபுரிவரை கடமையாகக் கருது' என்று சூஃபி மகான் அபு சையிது அவர்கள் கூறுகிறார்கள். அகமியமான குறிப்புகளின் அடிப்படையில் ஷெய்குனா அவர்கள் சந்தித்து பழகி தொண்டுபுரிந்த பெரியோர்கள்– இறைநேசர்கள் பலராவார்கள். அவர்களுள் ஷெய்குனா வாழ்ந்த

காலத்தில் வாழும் ஒலிமார்களென கொண்டாப்பட்டோர்களும் இறைக் காதல் வயப்பட்ட மஜ்தூப்களாக வாழ்ந்தவர்களுமான

நாகூர் ஷரீஃப் சாஹிப் ஒலியுல்லா,

கூத்துார் நூஹ் மஸ்தான் ஒலியுல்லா,

மஞ்சக்கொல்லை செய்யதினா ஷிப்லி காகா ஒலியுல்லா.

ஆகிய இவர்கள் மூவரும் ஷெய்குனாவின் மீது அளவிலா அன்புகாட்டி, தங்கள் இறைநிலையின் இரகசியத்தை வெளிப்படையாக உணர்த்தி, ஷெய்குனாவின் வாழ்க்கையை நெறிப்படுத்தினார்கள்.

இன்னும் ஆழியூர் ஸ்தலம் கண்ட மூட்டை பாவா என்றழைக்கப்படும் சையது அஹமது மீரான் சாஹிப் ஒலியுல்லா தொடங்கி, அநேக பெரியார்கள், ஒலிமார்கள், மஜ்தூப்கள் ஷெய்கு நாயகத்தின் அடிநாட்களிலிருந்து அவர்கள்மீது அளவிலா பாசமும் ஆன்மீக நேசமும் கொண்டிருந்தார்கள்.

அவர்களுள் ஷைகுனாவின் முன்னோர்களான கீர்த்திமிகு புகாராவிலிருந்து புறப்பட்டு வட இந்தியாவின் மூல்தானில் உரைந்து, மன்னர் மன்னர் முகம்மது பின் துக்ளக்கின் அவையில் நுழைந்து அருளாசி வழங்கி ஊஜ்ஜில் அடக்கம் கண்ட மகான், மகுதூம் ஜகான் ஜகான் கஸ்த் அவர்களின் பேரரான திருவாரூரில் சமாதி கொண்டிலங்கும் ஹைதர் அலீ ஜங்கிதோஸ்த் (ரலி) அவர்களின் வழித்தோன்றல்களான முகம்மது காசிம் ஒலியுல்லா அவர்தம் குமாரர் ஸையது அஹமது ஹுசைனி (ரலி) ஆகியோரின் பரிபூரண அன்பையும் அருளையும் ஆன்மீகப் பிரநிதித்துவத்தையும் ஷெய்குனா அவர்கள் நிறைவாகப் பெற்றிருந்தார்கள்.

**அறிவுமிக்க ஆனந்தத்துறவி:**

ஷெய்குனா அவர்கள் எஜமான் காதிர் ஒலி நாயகத்தின் உத்தரவுக் கொண்டு நாகூரிலிருந்து சென்னைக்குக் குடியேறி எழுத்தாளும் தவத்தில் ஈடுபடத் தொடங்கினார்கள். அவர்களுக்குள் எரிந்த இலக்கியத் தணலை ‘மணிவிளக்கு’ மாத இதழில் அச்சேற்றி குன்றிலேற்றிய தீபமாக்கியது ஷெய்குனா அவர்கள் தலைவர் என்று அன்போடு அழைக்கும் முஸ்லிம் லீகின் தள நாயகர் மரியாதைக்குரிய சிராஜுல் மில்லத் அப்துஸ் ஸமது அவர்களே ஆவார்கள்.

எழுபதுகளில் மணிவிளக்கு மாத இதழில் வெளியான ‘கௌதுகள் நாயகம்’ என்ற தொடர் காவியம் தமிழகம், இந்தியா மட்டுமின்றி உலகளவில் ஷெய்குனா அவர்களுக்கு வாசகர்களை தேடிக்கொடுத்தது.

ஷெய்குனாவின் சொல்லாடலையும், தனித்துவமான எழுத்தோட்டத்தையும் அவர்களின் சமகால மேதைகள் வரவேற்று பேச்சாலும்

*கௌதுகள் நாயகம் திருவடி கதியென்று*
*கருதா திருந்த பாவி*
*கண்கண்ட கடவுளை கருதிதுதி செய்யாது*
*காலம் கழித்த பாவி*

இப்படிப்பட்ட உயிரோட்டமான உணர்வுமிக்க வரிகளை சிராஜுல்மில்லத் அவர்கள் உளமுறுகிக் கேட்டுவிட்டு 'One of the great writer among us - நம்மிடையே உள்ள மிகச்சிறந்த எழுத்தாளர்' எனப்போற்றி மணிவிளக்கு,அரமுரசு பத்திரிகை நிர்வாகத்தை ஷெய்குனாவிடம் ஒப்படைத்துவிட்டு சிராஜுல் மில்லத் அவர்கள் தீவிர அரசியலில் இறங்கினார்கள்.

1975-76 ம் ஆண்டுகளில் இந்திராகாந்தி அம்மையார் அவசர நிலை பிரகடனப்படுத்திய சமயம், பத்திரிகைத்துறை முடங்கி போய், இருக்கின்ற ஊழியர்கள் ஒவ்வொருவராய் விலகிச் சென்ற போதிலும், கூத்தூர் கிராமத்திலிருந்த தன் நிலத்தை விற்று ஷெய்குனா அவர்கள் பத்திக்கை நடத்தினார்கள்.

இன்னல்களும் குழப்பங்களும் சூழ்ந்த நேரங்களில் கௌதுகள் நாயகம் முஹ்யித்தீன் ஆண்டகையின் சொற்பொழிவுகளே ஷெய்குனா அவர்களுக்கு ஆறுதலும் நம்பிக்கையும் அளித்தது.

**ஃபனா–நாஸ்தி:**

'நீ முற்றும் பூரணமாக நாஸ்தியாகி, நீ புடச்சட்டியை விட்டு வெளியிலெடுக்கப்பட்டு, உனக்கு புதிய பக்குவமும், ஆடைகளும், ஆபரணங்களும் உடுத்தாட்டப்பட்டு, மாபெரும் அரசனிடம் அழைத்து செல்லப்படும்' என்ற கௌதுகள் நாயகத்தின் திருவாக்கு, ஷெய்குனாவின் வாழ்க்கையில் உண்மையாகும் நேரமொன்று வந்தது. அந்த நல்ல நேரம்தான் ஹிஜ்ரி 1398ம் ஆண்டு ஜமாத்துல் ஆஹிர் பிறை 10 (18.05.1978) - எஜமான் ஷாகுல் ஹமீது நாயகத்தின் மஜார் எனும் திருச்சமாதியில் சந்தனம் பூசிய நாள்.

அந்த அருட்தினத்தில் அதிகாலையிலேதான், தன் ஆன்மாவின் ஆதாரமாய் விளங்கப்போகும் தம்முடைய அருமை குருநாதரை ஷெய்குனா அவர்கள் சந்தித்தார்கள்.

தெற்கிழக்கு ஆசியாவின் ஞானதீபமாம் குத்புல் அக்தாப் ஃபர்துல் அஹ்பாப் செய்யது ஷாகுல் ஹமீது நாகூரி அவர்களின் திருப்பேரரான ஹாதிமுல் ஃபகீர் ஹஜ்ரத் செய்யது முகம்மது ஹுசேன் சாஹிப் அல் ஆரிஃபுபில்லாஅவர்களிடம் முரீது (ஞானதீட்சை)பெற்றார்கள்.

ஷெய்குனா அவர்கள்,தங்கள் வாழ்வின் வசந்த காலக் கதவை தன்

குருவின் மூலமாக எஜமான் காதிர் ஒலி நாயகம் திறந்து வைத்ததை கண்ணாரக் கண்டு வியந்தார்கள்.

தன் குருவின் வேண்டுகோலுக்கிணங்க, ஷெய்குனா அவர்கள் 'குத்புல் இர்ஷாத் மாபெரும் ஜோதி ஹாஜா முயினுத்தீன் சிஸ்தி அஜ்மீரி' என்ற நூலை எழுதி முடித்தவுடன் எஜமான் காதிர் ஒலி நாயகத்தின் உத்தரவு கொண்டு ஹஜ்ரத் முகம்மது ஹுசேன் சாஹிபு அவர்களால் ஷெய்குனா அவர்களுக்கு காதிரியா தரீக்கத்தின் 'கிலாஃபத்' எனும் ஞானப் பரிவட்டம் சூட்டப்பட்டது.

**குருவும்–சீடரும்:**

ஷெய்குனா அவர்கள் தம் குருவிடத்தில் நிபந்தனையற்ற பக்தி, அன்பு, மற்றும் மரியாதையை வைத்திருந்தார்கள். அவர்களுடைய குருநாதர் வாழ்ந்த காலத்திலும் அவர்களது வாழ்நாளுக்குப் பின்னாலும் ஷெய்குனா அவர்கள் தன் குருவிடம் வைத்திருந்த அன்புக்கும் மரியாதைக்கும் அளவேயில்லை.

தன் குருவிடத்தல் சரணாகதி என்றிருந்த நம் ஷெய்கு நாயகம், தம் வாழ்நாளில் இறுதி மூச்சு உள்ளவரை தன் ஷெய்கின் போதனைகளுக்கு கீழ்படிந்து நடந்தார்கள். தன்னுடைய பக்தி,நம்பிக்கை, கீழ்படிதல் மற்றும் ஆன்ம ஒழுக்கத்தின் வாயிலாக தன் குருவை முழுமையாக தன்னுள் நிலைநிறுத்திக்கொண்டார்கள். தன்னுடன் முழுமையாக ஒன்றிசைந்துவிட்ட தம் சீடரை 'நீ என் ஆன்மாவுடைய பிள்ளை! என்னுடைய ஆன்மீக வாரிசு!' என்று கூறி தன்னிடமிருந்த பதினான்கு தரீக்கா எனும் ஞானப்பாதையின் பிரதிநிதித்துவத்தை தம் அருமை சீடரின் சிரசில் சூட்டி மகிழ்ந்தார்கள்.

தான் தேடி அடைந்த ஞானக்கலைகளையெல்லாம் தம் அருமை சீடருக்கு போதித்ததுடன், தாம் அரும்பாடுபட்டு பெற்ற 'சர்கலிஃபா ரிஃபாயி' என்ற ஞானப் பரிவட்டத்தையும் தம்முடைய உண்மை சீடனான ஷெய்குனா அவர்களுக்கு சூட்டினார்கள்.

தம் அருமை குருநாதரின் ஆசிகளோடும் குறிப்புகளோடும் ஷெய்கு நாயகம் எழுதிய நூல்களின் விவரம்

பேரின்ப ஜோதி ஹாஜா முயினுத்தீன் க்ஷிஸ்தி அஜ்மீரி
காருண்ய ஜோதி நாகூர் பாதுஷா நாயகம்
மனம் குளிர்ந்த மாதரசி நாகூர் சுல்தான் பீவி அம்மா
சன்மார்க்க ஜோதி ஏர்வாடி இபுறாஹிம் ஷஹீது (ஒலி)

**ஷெய்குனாவின் குடும்பம்:**

ஷெய்குனா அவர்களின் மாமனார் இந்திய யூனியன் முஸ்லீம் லீகின் தென்னாற்காடு மாவட்டத்தின் தலைவராய் விளங்கிய ஜனாப் அப்துஸ் சையிது சாஹிப் அவர்கள் ஆவர்.

*மனைமாட்சி இல்லாள் கண் இல்லாயின் வாழ்க்கை*
*எனைமாட்சித் தாயினும் இல்*

அதாவது அனைத்து நலன்களைப் பெற்றிருக்கும் கணவனுக்கு சரியான மனைவி அமைய வேண்டும், அப்படியில்லையெனில் எத்தனை நலன்கள் இருப்பினும் கணவனின் வாழ்வு வறண்டதுதான்

அதுபோல் ஷெய்குனா அவர்கள் தங்கள் வாழ்வை இறைவனுக்காகவும் இறைத்தூதருக்காகவும் இறைநேசச் செல்வர்களுக்காகவும் அர்பணிக்க கொழுகொம்பாய் நின்ற அவர்களின் துணைவியர்களான முகம்மது பீவி ஆசிரியை மற்றும் டாக்டர் ஆயிஷா பீவி அவர்களை இங்கே குறிப்பிடவில்லையென்றால் ஷெய்குனாவின் இந்த வாழ்க்கை குறிப்பு முழுமை பெறாது.

*மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்*
*நன்கலம் நன்மக்கட் பேறு*

என்ற வள்ளுவனின் குறலுருவே என் ஷெய்கு நாயகத்தின் குடும்பம் ஆகும்.

**அமைதி கொண்ட அருட்கடல்:**

தம் வாழ்நாள் முழுவதும் இரவும் பகலும் இறைவனுக்காவும், இறைத்துாதருக்காவும், இறைநேச நல்லடியார்களுக்காகவும் எழுத்தோவியம் தீட்டி கவிதைகள் பாடி களித்த ஷெய்குனா ஹைதர் அலீ யகீனுல்லாஷா சாஹிப் (ரலி) அவர்கள் கடந்த 09-05-2015 ம் தினத்தன்று, பண்ருட்டி நூர் முஹம்மது ஷா அவ்லியா அவர்களின் தர்காவில் சரியாக 3.50 மணிக்கு தாருல் பனாவை விட்டு தாருல் பகாவை அடைந்தார்கள். (இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜியூன்).

**எனதருமை முரீது சகோதர சகோதரியர்களே...**

ஷெய்கு நாயகம் ஸ்துால உடலோடு நம்மிடையே இருந்தபோது அவரது புறத்தோற்றத்தோடு நம்மில் பலர் சார்ந்திருந்தோம். ஆனாலும் அவருடைய மனதளவிலும் உணர்வு நிலையிலும் ஒன்றிசைந்திருப்பதற்கான வழிமுறைகளை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஏனெனில் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்,

‘நீங்கள் நான் என்ற மயக்கத்தில் அவன் என்கின்ற மரணத்தை அனுபவிக்கும் முன், நானுமில்லை, அவனுமில்லை என்ற மரணத்தை அடைந்து கொள்ளுங்கள்’ (மூத்தகப்ல அன்த மூத்து).

அந்த நேரத்துக்கு தக்கபடி தன்னில் தானாய் நடந்து வருவதை உன் செயலென்றும், என் செயலென்றும் காணாமல் விட்டு விடுவதே மரணம் என்பதாகும். அப்படி மரணித்த உடலுக்கு, ஆண்டான் அடிமை, இம்மை மறுமை என்பது எதுவுமில்லை. நம் ஷெய்குடைய நிலையும் இதுவாகத்தான் இருந்தது.

நம் ஷெய்குடைய உதவி, அவருடைய வழிகாட்டுதல் இன்னும் அவர்களுடைய போதனைகள் யாவும் அவர்கள் வாழ்ந்த குறுகிய காலத்திற்கு மட்டுமல்லாமல், எக்காலத்திற்கும் நீடித்திருக்கும் என்பதில் ஐயம் வேண்டாம்.

உண்மையான சீடர்களுக்கு குருவினுடைய உதவி அவர் தனது உடலை நீத்தவுடன் நின்றுவிடாது. அவ்வாறு அது நின்று விட்டால், அவர் உண்மையான ஷெய்கல்ல – அவனும் உண்மையான சீடனல்ல.

ஓர் காமிலான ஷெய்க் (ஞானகுரு) பிறப்பு – இறப்பு ஆகியவற்றின் குறுக்கீடு இல்லாதபடி என்றும் விழித்திருக்கும், என்றும் சீடர்களுடன் ஒன்றிசைந்திருக்கும் இயல்புடையவர் என்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

இன்று நம் ஷெய்கு நாயகம் ஹகீகத்துல் அஸ்ரார் அல்முஃபஸ்ஸிருல் குர்ஆன் அஷ்ஷெய்க் ஹைதர் அலீ யகீனுல்லாஷா அல் ஆரிஃபுபில்லா அவர்கள் நம்முடன் இல்லை,

அவரை நம்மால் பார்க்க முடியவில்லை, அவர்களுடைய குரலை நம்மால் கேட்கமுடியவில்லை ஆனால் நம் ஷெய்குனாவின் நூல்களும் அவர் அருளிச்சென்ற உபதேசங்களும் நம்மிடையே உள்ளது.

நம் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திற்கும் நம் ஷெய்குடைய போதனைகளைப் பயன்படுத்த முடியும். அவை நமக்கு வெறும் தத்துவமாக மட்டும் இல்லாமல், நம் வாழ்க்கை முறையாகவும் இருக்கும் தன்மையுடையதே.

இறுதியாகச் சொல்கிறேன் குரு–சீடனுக்கு இடையில் பிரிவு என்பதே இல்லை. ஷெய்கானவர் ஸ்தூல உருவில் இருந்தாலும் சரி, அல்லது சூக்கும உருவில் இருந்தாலும் சரி அல்லது அதையும் தாண்டி காரண மாகாரண உலகில் இருந்தாலும் சரி, அவர் தன்னுடன் ஒன்றிசைந்து இருக்கும் சீடனின் அருகில் என்றும் இருக்கிறார்.

*அல்மதத் யா ஷெய்க் !*

*அல்அமான் யா ஷெய்க் !*

*அஹ்தினி அஹ்தினி அஹ்தினி !*

## சங்கைக்குரிய ஷெய்கு நாயகம் ஹைதர் அலீ யகீனுல்லாஷா அவர்கள் எழுதி வெளியிட்டுள்ள நூல்கள்

தமிழ் நூல்கள்:

1.மாபெரும் ஜோதி குத்புல் இர்ஷாத் ஹாஜா முயினுத்தீன் சிஸ்தி அஜ்மீரி (ரலி)
2.மனம் குளிர்ந்த மாதரசி சையது சுல்தான் பீவி (ரலி)
3.காருண்ய ஜோதி நாகூர் பாதுஷா நாயகம் (ரலி)
4.சன்மார்க்க ஜோதி ஏர்வாடி இப்றாஹிம் பாதுஷா ஷஹீது(ரலி)
5.பண்ருட்டி நூர்முஹம்மது ஷா அவுலியா (ரலி)
6.மெய்ஞ்ஞான ஜோதி முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி(ரலி)
7.பாராளும் ஞானி பரமார்த்த ஜோதி பாக்தாதின் இராஜரிஷி முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி(ரலி)
8.நான்கு மதம் போற்றும் நாகூர் ஆண்டவர்
9.நாகூர் நாயகத்தின் பேரர் திருமயம் காட்டு பாபா ஃபக்ருத்தீன் ஒலியுல்லா
10.பேரின்ப சாகரம் திருச்சி தப்லே ஆலம் பாதுஷா நத்தஹர் வலி (ரலி)
11.நபி தாவூத் (அலை) –முத்துப்பேட்டை
12.பாராளும் ஃபக்கீர்களின் பேரரசர் பாபா ஃபக்ருத்தீன் (ஒலி)–பெனுகொண்டா
13.மாதரசிகதிஜாவின் காதலர் முகம்மத் நபி(ஸல்) – கவிதைகள்
14.பத்ரு சஹாபாக்கள்
15.அருட்பெருஞ்ஜோதி சுல்தானுல் ஆரிஃபீன் அஹ்மது கபீர் ரிஃபாயி (ரலி)
16.மும்மதம் போற்றும் நாகூரார்

ஆங்கில நூல்கள்:

17.Saint of Nagore - Redeemer of Faiths and Creeds
18.Beloved of Lady Kathija - Muhamed (peace) - Prophet of Allah
19.Baba Fakrudhin Oliyullah - Penukonda

அச்சில் –

20.ஆதி இறை அல்லாஹ்வின் தூதர் மாதரசி கதிஜாவின் மனம் மகிழ் மணாளர் முஹம்மது (ஸல்)
21.Beloved of Lady Kathija - Muhamed (peace) - Prophet of Allah

**சங்கைக்குரிய ஷெய்குனா ஹைதர் அலீ யகீனுல்லாஷா அவர்கள் எஜமான் காதிர் ஒலி நாயகத்திடம் சங்கமித்த பதிநான்கு தரீக்கத்தின் பிரதிநித்துவத்தை தங்கள் குருநாதரான அஷ்ஷெய்க் முஹம்மது ஹுஸைன் சாஹிபு அவர்களிடமிருந்து பெற்றிருந்தார்கள்.**

**அதன் விவரம்-**

தரீக்கத்தே ஹபீபிய்யா – சையத்னா ஹபீபுல் அஜமி (ரலி)
தரீக்கத்தே தபகாத்தியா – சையத்னா ஜிந்தா ஷாஹ் மதார் பதீவுத்தீன் (ரலி)
தரீக்கத்தே கர்கியா – சையத்னா மஹ்ரூஃபில் கர்கி (ரலி)
தரீக்கத்தே ஜுனைதியா – சையத்னா ஜுனைதுல் பகுதாதி (ரலி)
தரீக்கத்தே கஜரூனியா – சையத்னா அபு இஸ்ஹாக் கஜரூனி (ரலி)
தரீக்கத்தே ஃபிர்தௌசியா – சையத்னாநஜ்முத்தீன் குபரா ஃபிர்தௌசி (ரலி)
தரீக்கத்தே தூஸியா – சையத்னாஅபுல் ஃபர்ஹ் தர்தூஸி (ரலி)
தரீக்கத்தே ஜைதியா – சையத்னாஅப்துல் வாஹிதிப்னு ஜைத் (ரலி)
தரீக்கத்தே இயாலியா – சையத்னா புலைல் இப்னு இயால் (ரலி)
தரீக்கத்தே அத்ஹமியா – சையத்னா இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரலி)
தரீக்கத்தே ஹுபைரியா – சையத்னா ஹுபைரதுல் பஸ்ரி (ரலி)
தரீக்கத்தே சிஸ்தியா – சையத்னா ஹாஜா முயீனுத்தீன் சிஸ்தி அஜ்மீரி (ரலி)
தரீக்கத்தே உவைஸியா – சையத்னா உவைஸுல் கர்னி (ரலி)
தரீக்கத்தே ஹம்தானியா – சையத்னா அலீ ஹம்தானி (ரலி)

ஷெய்குனா அவர்கள் அனுஷ்டானத்தில் இருந்த வந்த ப்ரதானமான தரீக்குகள் – காதிரிய்யா, சிஷ்தியா, ஷத்தாரியா, தபகாத்தியா, சுஹ்ரவர்தியா, நக்ஷபந்தியா,ரிஃபாயியா ஆகியவைகளாகும்.

## அஷ்ஷெய்க் ஹைதர் அலீ யகீனுல்லாஷா அல்ஆரிஃபுபில்லா அவர்களின் கலீஃபாக்கள்

| | |
|---|---|
| ஜனாப் அலீ அபுதாஹிர் | – கடலூர் |
| ஜனாப் அபூபக்கர் | – நெல்லிக்குப்பம் |
| ஜனாப் நஸீர் | – இலங்கை |
| ஜனாப் பாஷா | – கடலூர் |
| ஜனாப் முஸ்தபா | – பண்ருட்டி |
| மௌலவி அஹமது மீரான் | –மேலப்பாளையம் |
| ஜனாப் உபைதுர் ரஹ்மான் சாஹிப் | – நாகூர் |
| ஜனாப் ஹாஜா சம்சுதீன் சாஹிப் | – நாகூர் |
| ஜனாப் சிராஜுதீன் | – நெல்லிக்குப்பம் |
| ஜனாப் அப்துல் கரீம் | – நெல்லிக்குப்பம் |
| ஜனாபா மாஹே நூர் சுல்தானி | – நெல்லிக்குப்பம் |
| ஜனாபா அத்தீன் கதிஜா | –கடலூர் |



**ஷெய்குனா அவர்களின் குருநாதர் மர்ஹூம் அஷ்ஷெய்க் முஹம்மது ஹுசைன் சாஹிபு ஆரிஃபுபில்லாஹ்**



**சங்கைக்குரிய ஷெய்குனா மர்ஹூம் ஹைதர் அலீ யகீனுல்லாஷா அவர்கள்**

## Sufi HyderAli Yakeenullashah
## Kalifathul Kadhiri, Shathari, Chishthi, Sir Kalifa Rifayee

Our beloved Sufi Saint and Spiritual master M.A.Hyder Ali Yakeenullashah (ra) was born on 19.10.1942 in Kuthur village, a place of cultural and heriditary elegance, in the Tanjore district of Tamil Nadu.

His parents Amir Ali and Fathima Beevi had been instrumental in his wordly education and his grandfather Mohammed Ali (ra) - Syed Alaudhin (ra) had been the materialistic guidance for his spiritual education and guidance. Being his priliminary Sheikh, seeding him in the direction of Mahriba at an early age of three.

He had his childhood education at his native then moved to Chennai for higher education.He joined Presidency College pursuing his Bachelors degree in English Literature.

Being a devout of Mohideen Abdul Qadir Jilani(ra) throughout his life, our Sheikh received 'Murid' from Habibullah Sha Chishthi (ra) and continued to practice the spiritual duties taught by Muhammed Mohideen Kalifathul Kadhiri (ra) of Kuthur.

As the wheels of life spinned, our beloved Sheikh received the complete blessings of Nagore Saint Shahul Hamid (ra), by receiving 'Murid' from Assheikh Kibla Mohamed Hussain Sahib Nagori (ra).

The blessings of his Spiritual master became predominent in his life and in the luminance of his divine light, our Sheikhna had penned the biographies of Holy Prophets and Divine Sufi Saints.

Him being the slave of his Divine master in his entire life, has penned the biography of Prophet Muhammed (peace), both poetic and literary versions in Tamil as well as English.

Today, hundreds of disciples of our Sheikh, spread all over the world, keep receiving his spiritual guidance.

M.J.Ali Abuthair
Kalifa Kadhiri Shathari Chisthi

<u>**சங்கைக்கரிய ஷெய்கு நாயகத்தின் முன்னோர்கள்**</u>



**அஷ்ஷைக் முஹம்மது காசிம் வலியுல்லாஹ்**



**அஷ்ஷைக் சையது அஹமது உசேன் (ரலி)**



**கூத்தூர் முஹம்மது அலி (ரலி)**